சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி (த/பெ. (லேட்) ர.புவனேஸ்வரன்) இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறைசெய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் (ஏடி2) துறை

அரசாணை (2ப) எண்.114

நாள்: 29.07.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஆடி – 13

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள். 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020.
3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.37537/அந1(2)/ 2018–1, நாள். 27.01.2021.

******

ஆணை:–

மேலே மூன்றில் படிக்கப்பட்ட மருத்துவக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் லினன் அட்டன்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, திரு.ர.புவனேஸ்வரன் என்பவர் 16.06.2006 அன்று பணியிடையே மரணமடைந்து விட்டார் என்றும், அவர் அப்பணியில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர் என்றும், அவரின் பிறந்த தேதி 01.05.1955 என்றும் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.04.2013 என்றும், இறந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி 09.06.2008 நாளிட்ட கடிதத்தின் மூலம் விண்ணப்பித்துள்ளார் என்றும், இவரின் பிறந்த தேதி 09.02.1993 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளான 16.06.2006 அன்று தனியர் 13 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி கருணையடிப்படையில் பணிநியமனம் பெற போதிய கல்வித் தகுதி பெற்றிருந்ததாலும், மூன்றாண்டு காலக்கெடுவுக்குள் விண்ணப்பம் சமர்ப்பித்திருந்ததாலும், குடும்பம் வறுமை சூழலில் உள்ளது என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்தில் எவரும் அரசு / தனியார் துறையில் பணியில் இல்லை என்றும், இறந்த அரசு ஊழியர் குடும்பத்திற்கு அசையும் / அசையாச் சொத்துக்கள் ஏதுமில்லை என்று புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டம் வட்டாட்சியர் சான்றளித்திருந்ததாலும், மனுதாரர் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற ஆட்சேபம் இல்லை என அரசு ஊழியர் குடும்பத்தில் இதர நபர்கள் எழுத்து மூலமாக

[த.பி.பா]

Scanned with OKEN Scanner

தெரிவித்திருந்ததாலும், மற்றும் கருணையடிப்படையில் பணிநியமனம் பெற இதர நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்ததாலும், மனுதாரர் திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, அவர் 18.05.2018 அன்று முற்பகல் பணியில் இணைந்துள்ளார் எனத் தெரிவித்து, தனியர் அரசுப் பணியில் சேர்ந்த நாளான 18.05.2018 முற்பகல் முதல் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு பரிசீலித்து, அதனை ஏற்று, தனியர் திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி, என்பவரின் இளநிலை உதவியாளர் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 18.05.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்ய ஏதுவாக குறுமவயது குறித்து அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20(6)(b) (வயது குறித்த தளர்வு) மற்றும் பிரிவு 28(2) (பணப்பலன்கள்) ஆகியனவற்றை தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58-ன்கீழ் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்த்தியும், திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி, என்பவரின் இளநிலை உதவியாளர் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 18.05.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவுகளை முறையே அவற்றின் அ.சா.எண். 11347/Q1/2021-1, நாள்.14.07.2021 மற்றும் அ.சா.எண். 21050/G2/2021-1, நாள். 20.07.2021-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

மருத்துவக் கல்வி இயக்குநர்,சென்னை- 600 010.
திருமதி.பு.மோனிகா ராஜலட்சுமி, இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
மாநில கணக்காயர், சென்னை-600 018.

நகல்

தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை- 600 009.
மனித வள மேலாண்மைத் துறை,சென்னை-600 009.
மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு (தகவுப்பிரிவு) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned with OKEN Scanner